<u>அத்தாட்சி அஞ்சல்</u>

<u>வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி</u>

விருதுநகர் மாவட்டம்

<u>ந.க.எண் :- **672 / 2009** (அ1)</u> <u>நாள்:- **11.06.2010**</u>

## <u>அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் (APAMT) – 2010 - 2011</u>

### <u>நாடு தழுவிய ஒப்பு நோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு</u>

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி **2010-2011** ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியினை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும். மேலும் ஒப்பந்ததாரர்கள் குறைந்த பட்ச தகுதியுடைய வகுப்பு மூன்றாம் நிலை ஒப்பந்ததாரர்களுக்கு பணிகள் வழங்கப்படும் .

பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **29.06.2010** வரை அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரத்தில் மாலை **5.00** மணி வரை உரிய தொகையினை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் . ஒப்பந்தப்படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புபவர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது .

வேலைக்குரிய டேவணித் தொகையை ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **30.06.2010**ம் தேதி புதன்கிழமை மாலை **3.00** மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் **3.30** மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்துக்கொள்ளலா

EVALUATION VERSION ePrint REGISTERED VERSION ADDS NO WATERMARK visit eprintdriver.com
Evaluation notes were added to the output document. To get rid of these notes, please order your copy of ePrint 5.0 now.

## 2010–2011 ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (லட்சத்தில்) | டேவணித் தொகை | டெண்டர் ஷெட்யூல் கட்டணம் | வேலை செய்து முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 17 பங்களா கிணறு எதிரில் உள்ள கழிப்பறை முதல் 5.00 லட்சம் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கத் தொட்டி வழியாக வார்டு எண். 15 அக்ரஹாரம் தெற்குத் தெருவரை தார்சாலை அமைத்தல். | 10.00 | 25000/- | 1560/- | 6 மாதம் |
| 2 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 3 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 4 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 5 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 6 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 7 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 8 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 9 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 10 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 11 | xxx | xxx | xxx | xxx | |

EVALUATION VERSION
ePrint
REGISTERED VERSION
ADDS NO WATERMARK
visit
eprintdriver.com
Evaluation notes were added to the output document. To get rid of these notes, please order your copy of ePrint 5.0 now.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 13 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 14 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 15 | xxx | xxx | xxx | xxx | xxx |
| 16 | xxx | xxx | xxx | xxx | xxx |

## ப தனைகள்

1. ஷெட்யூல் டெண்டர்களை மூடி முத்திரையிட்டு இன்ன வேலைக்கான டெண்டர் என்பதினை தெளிவாக எழுதி நிர்வாக அலுவலர், வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி என விலாசமிட்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் கொடுத்திட வேண்டும்.

2. அ) டெண்டருடன் அவ்வேலைக்கான டேவணித் தொகையை வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் செலுத்திய ரசீதை இணைத்துக் கொடுக்க வேண்டும். டேவணித் தொகை செலுத்தப்படாத டெண்டர் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

   ஆ) முழு டெண்டர் டேவணித் தொகையினை அஞ்சலக சேமிப்பு பத்திரங்களாக **01.06.2010** க்குப் பின்னர் விருதுநகர் மாவட்டத்திற்குள் வாங்கியவைகளை டெண்டருடன் இணைத்துக் கொடுக்கலாம். வேலை ஊர்ஜிதமானால் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாக அலுவலருக்கு ஈடு செய்து **(Pledged)** தர வேண்டும்.

   இ) டேவணித் தொகையில் தற்போது **1%** தொகையை ரொக்கமாக செலுத்தி பாக்கியை வேலைத் தொகையில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என உறுதிமொழி அளித்து டெண்டர் கொடுத்திடலாம்.

3. அ) **01. 04. 2010** க்கு பின் புதுப்பித்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கும், பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கும் டெண்டர் ஷெட்யூல் படிவங்கள் வழங்கப்படும்.

   ஆ) ஒப்பந்ததாரர்கள், விற்பனை வரி பதிவு எண் பெற்றவராகவும், வருமானவரி பதிவு எண் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இனி பதிவு எண் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அதன் விபரம் தெரிவித்திருக்க வேண்டும். இனி பதிவு செய்வதினால், பிடித்தமாகும் விற்பனை வரி , வருமான வரி, அந்தந்த துறைக்கு செலுத்துவதினை திரும்ப பெறுவதில் பிரச்சனை ஏற்படுமானால் அதற்கு இப்பேரூராட்சி பொறுப்பு ஆகாது.

   இ) வேலை முடிவுற்று அளவு, மேலளவு முடிவுற்று வேலைப் பட்டியல் அளிக்கப்பட்ட பின்னர், இவ்வேலை தொடர்பான புகாரின் பேரில், மறு அளவு மேற்கொள்ள உத்திரவிடப்படும் நிலையில், மறு அளவுப்படியான வேலைத் தொகையை பெற்றுக்கொள்வேன் என எழுத்து மூலம் உறுதிமொழி அளிக்கக்கூடியவர்களுக்கு மட்டுமே டெண்டர் ஷெட்யூல் படிவம் வழங்கப்படும்.

EVALUATION VERSION ePrint REGISTERED VERSION ADDS NO WATERMARK visit eprintdriver.com
Evaluation notes were added to the output document. To get rid of these notes, please order your copy of ePrint 5.0 now.

4. அ) டெண்டர் மனுக்களில் திருத்தங்கள் இருப்பின், அவை டெண்டர் கொடுப்பவரால் கையொப்பமிட்டு ஒப்புதல் செய்யப்பட வேண்டும்.

ஆ) வரப்பெற்ற டெண்டர் மனுக்கள் நிர்வாக அலுவலரால் குறிப்பிட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு பின் பிரித்து அப்போது ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இ) டெண்டர்கள் பிரித்து பரிசீலிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு நிர்வாக அலுவலரின் தீர்ப்பே முடிவானதாகும்.

ஈ) ஒப்பந்த தேதியினை ஒத்தி வைக்கவோ, மாற்றி அமைக்கவோ சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நிபந்தனைகளை ஏற்படுத்தவோ, மாற்றி அமைக்கவோ நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

5. அ) டெண்டரை ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ இப்பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

ஆ) எந்த ஒரு டெண்டரும் எஸ்டிமேட்டிற்கு 5% க்கு மேல் குறைவுபடுமானால் பணியின் தரம் மாறுபடலாம் என்பதற்காகவும், யாதொரு டெண்டர் எஸ்டிமேட்டிற்கு மேற்படுமானால், அதிகமாகும் செலவினைபேரூராட்சியினால் ஈடு செய்ய இயலாது என்பதற்காகவும், அத்தகைய டெண்டரை பரிசீலிக்காமல் தள்ளுபடி செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

இ) எந்த டெண்டர் அங்கீகரிக்கப்படுகிறதோ அதனை கொடுத்தவர் அந்த வேலையை செய்து முடிக்க உத்திரவு பெற்ற ஏழு தினங்களுக்குள் ரூ.50/-க்கான முத்திரைத்தாளில், இவ்வேலைக்கு ஒப்பந்தப் பத்திரம் ஒன்று நிர்வாக அலுவலருக்கு எழுதிக் கொடுத்திட வேண்டும்.

6. அ) ஒப்பந்தக்காரர் செலுத்தியிருக்கும் டேவணித் தொகை, அவ்வேலை சரிவர செய்யப்பட்டு, அதன் தணிக்கை முடிந்த பிறகு திரும்ப கொடுக்கப்படுவதாகும். தணிக்கையில் ஏதாவது பிடித்தம் இருப்பின், அதை பிடித்துக் கொண்டு, மீதித் தொகையை மட்டும் திரும்ப கொடுப்பதற்கு உட்படும்.

ஆ) டேவணித் தொகைக்கோ, யாதொரு சூழ்நிலை முன்னிட்டு நிலுவைப்படும் வேலைத் தொகைக்கோ வட்டி வழங்கப்பட மாட்டாது.

இ) வேலைத் தொகை வழங்கப்படும் தேதியிலிருந்து ஒரு ஆண்டு முடிவிற்கு பின்னர் அவ்வேலையின் தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கை வரப்பெற்ற பின்னர் தணிக்கை தடை ஏதுமில்லை என்றால் டேவணி திரும்ப கொடுக்க தகுதிபெறும்.

ஈ) ஏற்கப்படாத டெண்டர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள டேவணித் தொகைகள் டெண்டர்கள் பேரிலான இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்திற்குப் பின் காசோலை மூலம் திரும்ப கொடுக்கப்படும்.

7. அ) வேலைத் தொகையில் அமலில் உள்ள விகிதப்படி (தற்போது 2% வருமான வரியும் 16% மேல்வரியும் உள்ளது மாறுதலானால் அதன்படி) பிடித்தம் செய்து வருமான வரித் துறைக்கு செலுத்தப்படும்.

ஆ) தமிழக அரசு விற்பனை வரி சட்டவிதிகள்படி விற்பனை வரி சிவில் கட்டுமான பணிக்கு 2% மற்ற பணிகளுக்கு 4% (தற்போது அமலில் உள்ளவை மாறுதலானால் அதன்படி) மற்றும் மேல்வரி 5% வேலைத் தொகையில் பிடித்தம் செய்து விற்பனை வரித் துறைக்கு செலுத்தப்படும். மேலும் தொழிலாளர் நல பங்குத் தொகை 0.3% பட்டியல் தொகை பிடித்தம் செய்யப்படும்.

8. அ) ஒப்பந்ததாரர் வேலைகளை செய்து முடிக்க உத்திரவிட்ட காலக் கெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினால் அபராதம் விதிக்கவும் அதனை வேலைத் தொகையில் பிடித்தம் செய்யவும் நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

ஆ) வேலையை செய்து முடிக்க ஒப்பந்ததாரர் முன்வராத நிலையில் ஒப்பந்ததாரர் பொறுப்பில், செலவில் ரத்து செய்து அதனை இலாகா மூலமோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரியோ முடிக்கப்படும்.

9. அ) திட்டநிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் வேலைகள் எடுக்கப்பட்டுள்ளதால், நிதி வரப்பெறுவதற்கு ஏற்ப வேலைத் தொகை முழுவதுமாகவோ, பகுதிகளாகவோ வழங்கப்படும்.

ஆ) வேலையின் மதிப்பீடுகளில், தொழில்நுட்ப பணியாளர் சம்பளம், எதிர்பாராத சில்லரை செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளதால், வேலைகளின் அளவுகள்படியான வேலைத்தொகை, மதிப்பீடு இயல்பாக குறைபடும்.

EVALUATION VERSION ePrint REGISTERED VERSION ADDS NO WATERMARK visit eprintdriver.com EVALUATION VERSION
Evaluation notes were added to the output document. To get rid of these notes, please order your copy of ePrint 5.0 now.

10. வேலை ஆரம்பிப்பதற்கு முன்பும், வேலை நடைபெறும்போதும், வேலை முடிந்த பின்னரும் என்ற நிலைகளில் புகைபடங்கள் (**Maxi Size** மற்றும் **A4 Size**) போட்டோ எடுத்து அளிக்க வேண்டும். புகைபடங்கள் ஒப்பந்ததாரர் பொறுப்பில் எடுத்துக் கொடுக்க வேண்டும்.

11. வேலையின்போது வேலை முடிந்த பின்னர் மண்டல அலுவலர் (சோனல் ஆபிஸர்) பார்வையிடுவதில், வழங்கும் அறிக்கையின் பேரில் வேலைத் தொகை மாறுதலானால் மாறுதலாகும் தொகையே வழங்குவதற்கு உட்படும்.

12. வேலைத் தொகை யாவும், அவ்வேலையின் ஆவணங்கள் பரிசீலித்து பட்டுவாடா செய்யப்படும்.

13. மதிப்பீட்டில், டெண்டரில் வேலைக்கான மூலப்பொருள்கள் எந்தந்த சைஸ்களில் சேகரிக்க குறிப்பிடப்பட்டு உள்ளனவோ அதே சைஸ்களில் சேகரம் செய்யப்பட வேண்டும். ஏற்க முடியாத அளவுக்கு மீறியவைகள் / அளவுக்கு குறைவானவை நிராகரிக்கப்படும்.

14. ஒப்பந்த வேலைக்கான டெண்டர் டேவணித் தொகையினை **29.06.2010** மாலை **1.00** மணிக்குள் செலுத்தப்பட வேண்டும்.

15. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட பொறியாளர் கையேட்டில் குறிப்பிட்டுள்ள தகுதியுடைய ஒப்பந்தகாரர்கள்.

16. ஒப்பந்தபுள்ளி தொடர்பான நிபந்தனைகள் வேலை நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு www.tenders.tn.gov.in www.tntownpanchayats.org என்ற இணைய தளத்தில் பார்க்கலாம்.

(ஒ.ம்) **XXXXX,**
திரு.ந.இராஜேந்திரன்,
செயல் அலுவலர்,
வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்–626132.

<u>பெறுநர்</u> :–

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள்,
வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி,
வத்திராயிருப்பு.

<u>நகல்</u>:–

1. மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம் –அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) சிவகங்கை மண்டலம் – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) சிவகங்கை மண்டலம் – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. இளநிலை பொறியாளர் (பேரூராட்சிகள்), வத்திராயிருப்பு (தொகுப்பு), விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக.
5. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், வத்திராயிருப்பு அவர்களுக்கு தகவலுக்காக.
6. செயல் அலுவலர்கள், விருதுநகர் மாவட்டம் அனைத்து பேரூராட்சிகளின் தகவலுக்காக
7. அலுவலக விளம்பர பலகை வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி.

EVALUATION VERSION ePrint REGISTERED VERSION ADDS NO WATERMARK visit eprintdriver.com
Evaluation notes were added to the output document. To get rid of these notes, please order your copy of ePrint 5.0 now.